5th November 1966]

(இ) எத்தனை லைசென்ஸ் கொடுக்கப்பட்டது ?

(உ) கொடுக்காமல் இருக்கும் விண்ணப்பங்கள் எத்தனை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 249.

(இ) 69.

(உ) 48.

திரு. ஆ. தங்கவேலு : சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் முடிய கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாகப் பரிசீலனை செய்து நெல் மிஷின் போட லைசென்ஸ் கொடுக்க உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மூன்று, நான்கு ஆண்டுகளாக விண்ணப்பம் போட்டும், அநேக விண்ணப்பங்கள் பேரில் லைசென்ஸ் கொடுக்கப்படாமல், கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவைற்றுக்கும் உடனடியாக லைசென்ஸ் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு வெ. ராமையா : கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட தேதி வரைக்கும் அரசினருக்கு வந்த விண்ணப்பங்களைப்பற்றிய விவரம் தெரிவித்தேன். அந்தத் தேதிக்குப் பிறகு, இன்னும் இருக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தி, எந்த எந்த கிராமங்களில் நெல் மிஷின் இல்லையோ அதற்கெல்லாம் ப்ரையாரிடி கொடுக்கப்படுகிறது. சட்ட அடிப்படையில் என்ன விதிமுறை இருக்கிறதோ அதைப்பார்த்துப் பரிசீலனை செய்து மேலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Free medical aid for teachers

* 451 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to provide free medical aid for teachers employed in Private Schools also ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏனைய பொதுமக்களைப் போலவே, தனியார் பள்ளி ஆசிரியர்களும் இலவச உணவுடன் இலவச மருத்துவ உதவியும் பெற உரிமையுள்ளவர்களாவர் ; ஆனால் அவர்களுடைய மாத வருமானம் 100 ரூபாய்க்குக் குறைவாக இருக்கவேண்டும். அவர்களுக்கு மேற்கொண்டும் மருத்துவச் சலுகைகளை அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சர்க்கார்ப் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு இத்தகைய வசதி இருக்கிறதாக நான் அறிகிறேன். அப்படியானால், சர்க்கார்ப் பள்ளி ஆசிரியர்கள் பெறும் மானியத்தைப் போலவே தனியார்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் முழு மானியம், சம்பளம் முதலியவை கொடுக்கக் கூடிய இந்த நேரத்தில், சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் பாராட்டுவதற்கு

[5th November 1966

என்ன காரணம்? இரு வகை ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் காட்டாமல், சர்க்கார்ப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனியார்த் துறைப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்க முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கைவிட்டுவிட்டது.

நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி

* 452 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலுள்ள தனி நபர் ஒருவர், நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி ஒன்று நிருவுவதற்கு, மதுராந்தகம் தாலூகா ஆக்தூர் கிராமத்தில் R.S No. 405-ல் உள்ள 25 ஏக்கர் நிலங்கோரி 3—10—1965-ல் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டருக்கு மனு செய்துள்ளாரா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) Yes.

(*b*) The area requested for assignment is not available.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: நாட்டு மருந்துப் பரிசோதனைக் கல்லூரி ஒன்று கட்டுவதற்காக மனை கோரப்பட்டு, அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டபிறகு, அந்த மனையை வேறு அரசாங்க அலுவலகத்திற்காக ஏற்பாடு செய்வதாகச் சொல்லிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு எதிரிலேயே பல ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றனவாம். அதையாவது கொடுத்து, அங்கே இதை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் இதைப்பற்றித் தகவல் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் கட்டுவதற்கு மனுப் போட்டவருக்கு இப்பொழுது வேறு இடம் கொடுக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

Compensatory allowance to Medical Officers

* 453 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal, to sanction payment of any compensatory allowance to medical officers with L.I.M. or G.C.I.M. qualifications, employed in dispensaries of Indian or Indigenous Medicines under local bodies; and

(*b*) if so, the details thereof?